IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.218/2022
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்:12.05.p.m.

<u>வா.சா.1 சாட்சி கண்ணாகுமார் த.பெ.ரவிச்சந்திரன்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 08.04.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. வழக்குச் சொத்து எனது தாத்தவான ராஜையா என்ற வீரபத்திரன் எனது பாட்டி 1ம்பிரதிவாதி தனலட்சுமி இருவரும் அவர்கள் சுயசம்பாத்தியத்தை கொண்டு கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். வழக்குச் சொத்தை பொறுத்து எனது தாத்தவான ராஜையா என்ற வீரபத்திரன் எனது பாட்டி 1ம்பிரதிவாதி தனலட்சுமி இருவரும் பெற்ற 22.8.1990ம் ஆண்டின் கிரைய ஆவணத்தை வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது தாத்தாவிற்கும் 1ம்பிரதிவாதிக்கும் எனது தந்தையான 2ம்பிரதிவாதி இரவிச்சந்திரன், 3ம்பிரதிவாதியான உமாராணி, 5, 6 பிரதிவாதிகளின் தந்தையான இரமேஷ்பாபு ஆகிய 3பேர் மட்டுமே வாரிசுதார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா ராஜையா எப்போது இறந்தார் என்றால் 2006ல் இறந்தார். எனது தந்தையின் உடன்பிறந்த சகோதரர் இரமேஷ்பாபு எப்போது இறந்தார் என்றால் 1998 ஆகும்.

3.தாவாச் சொத்தை தவிர்த்து முத்துராமலிங்கபுரம் சர்வே எண் 482ல் கண்ட 3செண்டு இடம் மற்றும் பைக்காராவில் உள்ள கதவு எண் 46ல் உள்ள சொத்துக்கள் உள்ளனவா என்றால் தாவாச் சொத்தை தவிர எனது தாத்தாவிற்கு வேறு சொத்துக்கள் இல்லை. தாவாச் சொத்தை தவிர எனது தாத்தாவிற்கு மேற்கண்ட சொத்துக்கள் பாத்தியம் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என்று மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

4. முத்துராமலிங்கபுரம் நத்தம் சர்வே எண்482ல் கண்ட 3செண்டு இடத்தில் ஒருபகுதியை எனது தந்தை 2ம்பிரதிவாதி 2013ம் வருடம் எனக்கு தானமாக கொடுத்தார் என்றால் சரிதான். எனது தாத்தாவின் இறப்பிற்கு பின்பு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து 1முதல் 3 பிரதிவாதிகளுக்கு இடையே குடும்ப ஏற்பாடு வாய்மொழியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது.

5. எனது தாத்தாவின் சொத்துக்களை பொறுத்து குடும்ப ஏற்பாடு ஏற்பட்டது என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி குடும்ப ஏற்பாட்டின்படி வழக்குச் சொத்து 1ம்பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் சரிதான். வழக்குச் சொத்து எனது தாத்தாவின் சுயசம்பாத்திய சொத்து என்பதால் 1முதல் 3 பிரதிவாதிகளுக்குத்தான் பாத்தியம் என்றாலும் எனக்கு பாகஉரிமை இல்லை என்றாலும் சரியல்ல.

6. வழக்குச்சொத்து 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதால் 7.11.2008ல் 2, 4 பிரதிவாதிகளுக்கு 1ம்பிரதிவாதி கிரையம் கொடுத்தது சட்டப்படியானது என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதி 4ம்பிரதிவாதிக்கு கொடுத்த 12.4.2010ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது என்றால்

சரியல்ல. வழக்குச்சொத்தை பொறுத்து எனக்கு எந்தவித பாக உரிமையும் இல்லை என்பதால் நான்கோரும் பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:12.20 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.04.08 17:10:45 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.